
உ

சிவமயம்



சுன்னாகம்

உடையார் வளவு

அமரர் மகேசன் தங்கம்மா அவர்களின்

யாக்கை மறைவு குறித்த

# நினைவு மலர்

28-05-2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அன்னை
மடியில்
30
11
1933



ஆண்டவன்
அடியில்
28
04
2001

## அமரர்

# மகேசன் தங்கம்மா

### திதி வெண்பா

தங்கம்மா இவ்வாழ்வு வேண்டாம் என வெறுத்து
சங்கரன்தாள் சேர்ந்தநாள் சாற்றுங்கால் - துங்கவிஷு
சித்திரை மாதம்சேர் பூர்வபக்கம் பஞ்சமி
இத்தரையில் சொல்லும் திதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமதி மகேசன் தங்கம்மா
அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

அமைதியாகவும் அடக்கமாகவும் வாழ்ந்த மயிலணி வாழ் மக்களுக்கு 28.04.2001ல் திடீரென ஒரு அதிர்ச்சிதரும் துன்பகரமான செய்தியைக் கேட்கவேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இச்செய்தியை எவ்வாறு கூறுவதென்று தெரியவில்லை. அதுதான் திருமதி தங்கம்மா மகேசன் அவர்கள் கொழும்பில் காலமானார் என்பதுதான். அன்னார் கடந்த மூன்று வருடங்களாக இடைக்கிடை கொழும்பு சென்று வைத்திய ஆலோசனை பெற்று வருவது வழக்கம். ஆனால் இம்முறை அன்னாருடைய வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மக்கள், மருமக்கள், பேரமக்கள், சகோதரிகள், மைத்துனர்கள், உறவினர்கள் எல்லோரும் கதறியபடி பேரமக்கள் அம்மம்மா அம்மம்மா என கண்ணீர் விட்டு அழைக்க அன்னாருடைய உடலைத்தாங்கிய பிரேத பெட்டி வீடு வந்து சேர்ந்தது. பேச்சற்று, மூச்சற்று, செயலற்று பூவும் பொட்டுடனும் மணப் பெண்போலக் காட்சியளித்த அம்மையாரின் அழகிய காட்சி கண்டவர்கள் மனதை உருக்கியது. அம்மம்மா ஏன் பேசாமல் இருக்கிறா என பேரப்பிள்ளைகள் வினவ, அங்கு கூடியவர்கள் செய்வதறியாது திகைத்த காட்சி சொல்லொணாத் துக்கத்தை ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரத்துவமடைந்த தங்கம்மா அவர்கள் பரம்பரை பரம்பரையாக கல்வியறிவு, உயர்பதவிகள், நற்பண்புகள் சைவாசாரம் எல்லாம் ஒருங்கே அமைந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர், அன்னாரின் தந்தையார் கந்தரோடையைச் சேர்ந்த கனகராஜ் உடையாரின் தவப்புதல்வன் துரையப்பா ஆவர். துரையப்பா அவர்கள் பெருநிலக் கிழாராகவும் தர்மசீலனாகவும் பரோபகாரியாகவும் விளங்கி அறவழி நின்று பிறர் நலன் பேணிய ஒருவர். தாயார் சிறாப்பர் பொன்னம்பலம மகள் சரஸ்வதிப்பிள்ளையாவர். சிறாப்பர் பொன்னம்பலம் அவர்கள் சுன்னாகம் கதிரமலைச்சிவன் கோவில் முகாமையாளராகக் கடமையாற்றியதோடு புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி தர்மகர்த்தாசபை இணைத்தலைவருமாவார். இப்பெரியார் சமய வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி, கலை கலாச்சார வளர்ச்சிக்கு தன் முன்னோர் வழிநின்று அரும்பாடுபட்டார் என்றால் மிகையில்லை. துரையப்பா சரஸ்வதிப்பிள்ளை இருவரும் வருவிருந்தோம்பி, பயன்கருதாது பல பணிகளை ஆற்றி, சுற்றமும் சூழ, சகல சிறப்புகளோடும் வாழந்து வருங்கால நான்கு பெண்களையும் ஒரு ஆண் பிள்ளையையும் பெற்று மகிழ்ந்தனர். இவர்களுடைய மூத்தமகள் ஞானம்பிகை புத்தூர் மழவராயர் பரம்பரையைச் சேர்ந்த பெரும்பாகக் கல்விப்பணிப்பாளர் திரு.தி. மாணிக்கவாசகரைத் திருமணம் செய்தார். துரையப்பா தம்பதிகளின் இரண்டாவது மகள் இரத்தினாம்பிகை கோப்பாயைச் சேர்ந்த திரு குமாரசிங்கம் அவர்களை மணஞ்செய்தார். மூன்றாவது புதல்வி பரமேஸ்வரி திரு.சிதம்பரநாதனை துணைவராகக் கொண்டுள்ளார். இவர்களுடைய ஒரேயொரு மகன் ஆசிரியர் நாகநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லாகத்தைச் சேர்ந்த இராமநாதன் கல்லூரி ஆசிரியை சாரதாதேவி அவர்களை தனது வாழ்க்கைத்துணை நலமாக அமைத்துக்கொண்டார்.

தங்கம்மா அவர்கள் துரையப்பா தம்பதிகளின் கடைசிப் புத்தரியாவர். பெற்றோர் அவரை பாலூட்டி, தாலாட்டி மிகச் செல்லமாக வளர்த்தனர். துள்ளித் திரியும் பிள்ளைப்பருவத்தில் ஆடிப்பாடி விளையாடி மகிழ்ந்தார். அவருடன் விளையாடி, ஒரே வாகனத்தில் பிரயாணஞ்செய்து, இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்றவர்களில் பலர் அம்மையாருக்கு திருமணம் பருவம் வந்ததும் ஒத்ததனம், நலம், மற்றும் உயர்பண்புகள் உள்ள கோப்பாயைச் சேர்ந்த சிந்தாமணி சேதுப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரரான மகேசன் என்பவரை திருமணம் செய்து வைத்தனர். திரு.மகேசன் இலங்கை மின்சார சபையில் பிரதம லிகிதராக இலங்கையின் பலபாகங்களிலும் கடமையாற்றி ஒய்வுபெற்றபின் சமய சமூக சேவையில் ஈடுபட்டுள்ளார். மகேசனின் தந்தையார், மனைவி காலமானதும் செல்லம்மா என்பரைத் திருமணஞ்செய்து சிவானந்தமலர் என்பவரையும் புவனேஸ்வரி என்பவரையும் பெற்று மகிழ்ந்தனர். சிவானந்தமலர் விக்கினேஸ்வரனை துணைவராகக் கொண்டு ஜமுனா, ஜங்கரன் ஆகிய குழந்தைகளுடன் கூடிக்குலாவி மகிழ்ந்து இல்லறத்தை இனிதே நடத்தி வருகின்றனர். புவனேஸ்வரியின் கணவர் கதிர்காமநாதன் ஆவர்.

தங்கம்மா மகேசன் தம்பதிகள் வள்ளுவர் காட்டும் இல்வாழ்வு வாழ்ந்து, நன்மக்களைப் பெற்று நிறைவாக வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனர். ஒரு பெண்ணுக்குரிய சகல நற்பண்புகளும் பல்வேறு சிறப்பம்சங்களும் அமரத்துமடைந்த தங்கம்மாவிடம் காணப்பெற்றன. மிகுந்த கடவுள் பக்தியுடைய அன்னார் சமயவாழ்வு வாழ்ந்து, விரத அனுஷ்டானங்களை முறையாக்கடைப்பிடித்து சிவ நாமங்களை முறையாக நவின்று, திருமுறைகளையும் பகவான் பாபாவின் பஜனைப்பாடல்களையும் மனமுருகிப் பாடி வாழ்ந்த பெருமைக்குரியவர். வெள்ளிக்கழமை காலை அருச்சனைத் தட்டத்தினை கைகளில் ஏந்தி முருகன் கோயிலுக்குச் செல்லத் தவறமாட்டார். வியாழக்கிழமைகளில் மாலை நேரத்தில் சுன்னாகம் மயிலணியில் அமைந்துள்ள சாயி சமித்தியில் நடைபெறும் பஜனையில் பங்கு பற்றுவது வழக்கம். மேலும் சாயி சமித்தியைச் சேர்ந்தவர்கள் மேற்கொள்ளும் சமய, சமூக சேவையிலும் மிக உற்சாகமாக ஈடுபடுவார். அமரர் தங்கம்மா அவர்கள் முன்செய் புண்ணியம் காரணமாக தலயாத்திரை தீர்த்தயாத்திரை மேற்கொள்ளும் கன்னியா குமரிமுதல் காசிவரை யாத்திரை செய்து பல புனித தீர்த்தங்களில் நீராடி ஆலயங்கள் பலவற்றுக்குச் சென்று தரிசனம் செய்யும் பேறு பெற்றுள்ளார். புட்டபத்தியில் பகவான் சத்திய சாயி பாபாவின் தரிசனம் கிடைக்கப்பெற்றவர்களில் இவரும் ஒருவர். எல்லா ஆலயங்களிலும் விசேட விழாக்கள் நடைபெற்றால் அங்கு அம்மையாரைக் காணலாம். சுன்னாகம் கதிரமலைச்சிவன் கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெருமானின் ஒரு அடியவராக விளங்கியதோடு ஒரு திருவிழாவையும் பொறுப்பேற்றுச் செய்து வந்தார்.

இவ்வாறு வாழ்ந்து வருங்கால் இரு ஆண்பிள்ளைகளையும் இரு பெண்பிள்ளைகளையும் பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ந்ததுடன் அவர்கள் நன்மைக்காக நோயுற்ற வேளையிலும் பூரணமாகத் தன்னைத் தியாகம் செய்துள்ளார். வள்ளுவர் கூறிய பின்வரும்

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணி தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்ற குறளுக்கு ஏற்ப வாழ்ந்த பெருந்தகையவர். அன்னாரின் மூத்த மகள் சரசாலையைச் சேர்ந்த ஆசிரியர் த.வே.தியாகராசாவின் மகனும் யாழ்மாவட்ட தமிழ் காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அ்பாத்துரை விநாயமூர்த்தியின் ஒன்றை விட்ட சகோதரருமான திரு.சிவகுமாரனைத் திருமணம் செய்த குமரன், பிரணவன், பிரசாந்தன், கஜானன், மகிமா என்ற குழந்தைகளைப் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்கின்றனர். திரு.சிவகுமாரன் யாழ்ப்பாணம் மக்கள் வங்கியில் தலைமைக் காரியாலயத்தில் கடமையாற்றுகிறார். தங்கம்மாவின் மூத்த மகன் ஸ்ரீதரன், சரோஜா என்ற பெண்ணை மணஞ் செய்து சாள்ஸ், சரத், சர்மினி என்ற மக்களுடன் ஜேர்மனியில் தொழிலாற்றுகிறார். இரண்டாவது மகள் துஷ்யந்தி சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியையாகக் கடமையாற்றுகிறார். அவர் தெல்லிப்பழையைச் சேர்ந்த சிவகுமாரன் என்பவரைத் திருமணம் செய்து லக்சனா என்ற மகளுடன் இல்லறத்தை இனிதே நடத்திவருகின்றார். திரு.சிவகுமாரன் மத்திய கிழக்கு நாடான சவுதி அரேபியாவில் கடமையாற்றுகின்றார். அன்னாருடைய இரண்டாவது புதல்வன் கதாதரன் அரச மொழித்திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையார் கொழும்பு சென்றால் கதாதரனுடன் தங்குவது வழக்கம். அமரத்துவமடைந்த தங்கம்மா மகேசன் அவர்களிடம் பல நற்பண்புகளும், சிறப்பியல்புகளும் ஒருங்கே அமைந்திருந்தன. அவர் பெற்றோருக்கு கனிஷ்ட புதல்வியாக இருந்த காரணத்தால் தனது சகோதரர்களுடைய மக்களை தன்மக்கள் போலக் கருதினார். அவர்களிடம் அன்பும் பரிவுமுடையவராக தன்னாலான பணிகளைக் கடமையுணர்வுடன் ஆற்றினார். அவருடைய இல்லத்துக்குச் செல்பவர்களை விருந்தோம்பி அனுப்புவது அன்னாருடைய மிகச்சிறந்த பண்பாகும். ஏழை மக்கள் வறியவர்கள் அன்னரின் பரிவுக்கும் அன்புக்கும் உரியவரானார்கள். அறுசுவை உணவை அன்புடன் வழங்கி மகிழ்வதுடன், உறவினர்களுக்கு தான் செய்யவேண்டிய கடமைகளை ஒருபொழுதும் செய்யத் தவறவில்லை. அன்னார் இயற்கை எய்துவதற்கு முன் தினம் கூட ஒரு சில உறவினர்களுக்கு விருந்துபசாரம் ஒன்றை நடத்தி தனது இயல்பான பண்பை எல்லோரும் அறியச்செய்துள்ளார். பொறுமை, அடக்கம் சகிப்புத்தன்மை, அன்னாரின் அணிகலன்களாக விளங்கின. எந்நாளும் பன்முறுவல் பூத்த முகத்துடன், இனிமையாகப்பேசி எல்லோரையும் தன்வசப்படுத்திவிடுவார். அன்னாரின் இறுதிக்காலத்தில் பொல்லாத நோய் ஒன்று அவரைப்பீடித்தபோதும் தனது மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளை தவறாது செய்து மகிழ்ந்தார்.

இறுதியாக கொழும்பிலே உரையாடிக்கொண்டிருந்த சமயம், கணவனும், புதல்வனும் கதறியழ இறைவனடி சேர்ந்தார். ஜேர்மனியிலுள்ள மகன் ஸ்ரீதரன் (இராஜன்) செய்வதறியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகைத்து தொலைபேசி மூலம் தனது கவலையை கண்ணீர் சொரிய தந்தைக்கும், சகோதரனுக்கும் தெரிவித்துக்கொண்டார். தங்கம்மா அம்மையாருக்கு நண்பர்களும் உறவினர்களுமே அன்றி, பகைவர்கள் என எவரும் இலர். பல திசைகளிலுமிருந்து மக்கள் கூடி அன்னாருடைய பூதவுடலைத் தரிசிக்க காத்திருந்து, அது வந்ததும் கூடிக் கட்டியழுது தமது அஞ்சலியைச்செலுத்தினார்கள்.

அன்னார் ஆத்மா சாந்தியடைவதாக.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் உரை

கந்தபுராண கலாச்சாரம் மிகுந்த மயிலணி என்னும் திவ்ய பூமியிலே உத்தமியாக பிறந்தவராவார்.

பெயருக்கேற்ப அதேகுணத்துடன் இன்சொல் பேசி மக்களை மகிழ்வித்த உத்தமியார். சிவன் கோயில். முருகன் கோயிலில் நடைபெறும் விழா வெள்ளிவாரம், சங்காபிஷேகம் முதலிய நாட்களிலே "பூவார் மலர் கொண்டு அடியவராக" கோயில்களுக்கு வந்து வழிபாடு செய்வார். தொண்டு செய்வதிலும், சாயிபயனை செய்வதிலும் சிறந்து விளங்கினார். கணவருடன் சேர்ந்து தென்புலத்தார்கடன் தெய்வவழிபாடு, விருந்து முதலியவற்றில் வள்ளுவர் நெறிக்கு அமைய இல்லற வாழ்வு வாழந்த ஒரு சக தர்மபத்தினியாக விளங்கினார். சிறிது காலம் நோய்வாய்ப்பட்டு சிவ தியானத்துடன் இருந்து சிவபதம் அடைந்த தங்கம்மா அவர்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வள்ளி மாணாளனை வேண்டி கணவர் பிள்ளைகட்கு ஆறுதல் கூறி அரன் நாமம் பாடுவோமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ச.வரதராஜேஸ்வரக்குருக்கள்
கந்தசாமி கோயில்
மயிலணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமை கண்ணியம் மிக்கவராய் நிறைவாழ்வு வாழ்ந்த சாயி அன்பர்

அமரர் தங்கம்மா மகேசன் அம்மையார் அவர்கள் எல்லோரினதும் பெருமதிப்பைப்பெற்ற ஓர் சாயி அன்பராக விளங்கினார். அவர் பகவானின் திரு உருவப்படத்திற்கு வியாழன் தோறும் தவறாது மலர்மாலை சூடி எங்கள் நிலைய பஜனைகளில் பங்குபற்றுவார். அவரின் மறைவிற்குப்பின்னரே இவரின் இப்பணிபற்றி நாங்கள் கூடுதலாக உணரக்கூடியதாக உள்ளது.

இவர், தான்படுக்கையில் நோயுற்றிருந்து எவருக்கும் கஷ்டம் கொடுக்காது தனது ஆவி பிரியவேண்டும் என்று கூறிப்பிரார்த்திப்பார். எல்லோரினதும் பிரார்த்தனைகளையும் பகவான் நிறைவேற்றுவதில்லை என்பது யாவரும் அறிந்ததே. அவரவரது பிரார்த்தனையின் தூய்மையையும் தரத்தையும் அவரவரின் முக்கால செயற்பாடுகளையும் அறியவல்ல பகவான் அவற்றைக் கொண்டே பிரார்த்தனைகளை நிறைவேற்றுகின்றார். எங்கள் அம்மையாரின் பிரார்த்தனையை ஏற்று, அவர் நோயுற்றுப்படுக்கையில் இருந்து அழுந்தாமல், மக்கள் உற்றார், உறவினர் அலுக்காமல் ஆவி அகலும் சுபமரணம் எய்தியுள்ளமை அம்மையார் பகவானில் எவ்வளவு பக்தியுள்ளவராக இருந்துள்ளார் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

மேலும் அம்மையாரின் ஆதரவு கொடுக்கும் தன்மை, இன்சொல்லை, இன்முகப்பொலிவை வாழ்த்தாதோர் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பேரப்பிள்ளைகளின் மழலைச் சொற்களின் இன்பத்தையும் அனுபவித்து இவர்களைச்சீராட்டு பாராட்டுக்கள் செய்து மகிழ்ந்த எக்களிப்புடன் ஓர் பூரண வாழ்வைக் கண்டு இறைபதம் எய்தியுள்ளார்.

அம்மையாரின் மறைவினால் வாடும் அனைவருக்கும் மனச்சாந்தியை ஏற்படுத்தும் என்ற நல் நோக்குடன் 1984ல் அவுஸ்திரேலியாவிலிருந்து பகவானின் தரிசனத்திற்குப் பிரசாந்தி நிலையம் சென்ற அடியார்கள் குழுவினருக்கு பகவான் ஆங்கிலத்தில் அருளிய தெய்வீகச் செய்தியில் ஒரு பகுதியின் தமிழாக்கம் மனச்சாந்தியை, ஏற்படுத்தும் என்ற நல்நோக்குடன் தருகின்றோம் அது பின்வருமாறு :

"நீங்கள் இவ்வுலகத்திற்கு வந்தபொழுது நான் உங்களுடன் இருந்தேன். நான் எப்பொழுதும் உங்களுக்குள்ளும் உங்களைச்சுற்றியும் இருக்கின்றேன். நான் உங்கள் நலனுக்கு மட்டுமே செயற்படுகிறேன். தந்தை. தாய், சகோதரன், சகோதரி, மகன், மகள், எலலா உறவினர்களும் நீங்கள் அனுபவித்து பரிணாமிப்பதற்காக என்னால் விசேடமாகத் தெரிந்து உங்களுக்கு அளிக்கப்பட்டது. அவர்களின் தேவை இருக்கும் வரைதான் அவர்கள் உங்களுடன் இருப்பர்களேயன்றி முடிவின்றி உங்களுடன் பற்றிக்கொண்டிருப்பதற்காகவல்ல. அவர்கள் ஒவ்வொருவரையும் அவர்களின் காலம் வந்தவுடன் நான் எடுத்து விடுவேன்"

இதன்படி சுவாமியின் சங்கல்பப்படி அம்மையாரின் காலம் வந்ததும் சுவாமி எடுத்துவிட்டார். ஆகவே சுவாமியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளான இன்ப துன்பங்களை சமநோக்குடன் ஏற்கும் மனோ நிலையை விருத்திசெய்து துயருறும் அனைவரும் சாந்தி அடைவார்களாக, இவரின் ஆத்மா உயர்பதம் அடைய எங்கள் சுன்னாகம் சாயி நிலைய அன்பர்கள் பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

மா.தேவராசா,
தலைவர்
சுன்னாகம் சத்யசாயி நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# அணையாத தீபம் ........

அன்பின் வடிவமாக திருமதி தங்கம்மா மகேசன் அவர்கள் திகழ்ந்தார். எனது கணவரின் மைத்துனரான மகேசனும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகளாக கோப்பாயில் வளர்ந்தனர். எனது திருமணம் நடந்தபின் அவரின் உடன் பிறவாத்தம்பியாக மகேசனின் திருமணம் நடந்தபோது நானே தோழியாகச் சென்று தங்கம்மாவை இல்லத்தில் ஒளியேற்ற அழைத்து வந்தேன். எமது கோப்பாய் இல்லத்தில் இருவரும் அன்பு என்னும் விளக்கேற்றி இல்லறத்தை ஒளியாக்கி இருவரும் எமது சுக துக்கங்களைப் பகிர்ந்து உறுதுணையாக இருந்தோம். அவர் சிறிது காலம் கோப்பாயில் இருந்துவிட்டு தனது சொந்த வீடாகிய சுன்னாகத்தில் ஒளி கொடுத்து வாழ்ந்தார்.

ஆங்கு சென்றும் என்னை கைவிடவில்லை. எனது குறிப்பு உணர்ந்து என்னிடம் வந்து அன்பு அலைகளை வீசிவிட்டுப்போவார். என்னிடம் மட்டுமல்ல உற்றார். உறவினர், அயலவர் யாவரிடமும் அன்பு சத்தியம் தர்மம் அகிம்சையுடன் தான் பழகுவார். "தங்கம்மா" என்ற பெயருக்கேற்றபடி "தங்கமாகவே" வாழ்ந்து எல்லோரின் மனதிலும் பதிந்து விட்டார்.

அவரிற்கு மாறாத சுகவீனம் ஏற்பட்டும் அவர் மனம் தளரவில்லை "என்றோ முடிந்த காரியம்" என்ற யோகர் சுவாமிகளின் வாக்கின்படி தனது உடல் உள ஆத்மீக சக்தியை விடக்கூடாது என்று தனது நாளாந்த குடும்ப வேலைகளைச் செய்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் இன்முகத்திலும் சுறுசுறுப்பிலும் அவரின் சுகயீனம் பலருக்கு தெரியாமலிருந்தது. பிறந்த இடத்திலும் புகுந்த இடத்திலும் அவர் தனது அன்பைப் பதித்து விட்டார். கடைசி மூச்சுவரை எல்லோரையும் அன்புடன் பேணி தனது கடமையைச் செய்து மனதிலும் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டார். பகவான் ஶ்ரீ சத்தியசாயிபாபாவின் பாதாரவிந்தங்களில் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**அன்பின் சகோதரி**
திருமதி.சி.பாஸ்கரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயாய் தாரமாய்.................

சிறுவயதிலேயே அன்னையை இழந்து தாயன்பு என்பது என்ன என்று அறியாமலே வளர்ந்தவன் நான். எனது தந்தையின் தாயாலும், சகோதரியாலும் வளர்க்கப்பட்டேன். எனது சம வயதுடைய மாமியின் மகன் பாஸ்கரனும் நானும் ஒன்றாகவே கல்வி பயின்று பரீட்சைகளில் சித்தியடைந்து எங்கள் 20 தாவது வயதில் ஒரே நாள் ஒரே திணைக்களத்தில் வேலைக்கமர்ந்தோம். வேலை நிமித்தம் பிற மாவட்டங்களுக்குச் சென்றுவிட்டதால் ஒரு குடும்பப் பிணைப்பு இல்லாமலே வாழ்ந்து கொண்டிருந்தேன். எனது சின்னம்மாவும் அவரது பிள்ளைகள் சிவானந்தமலரும் புவனேஸ்வரியும் (எனது சகோதரிகள்) என்மேல் அன்பு கொண்டிருந்தார்கள்.

இவ்வாறிருக்க எனக்கு பெரியோர் திருமணம் செய்து வைக்க நிச்சயித்தார்கள். சுன்னாகம் உடையார்வளவு துரையப்பா சரஸ்வதி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி தங்கம்மாவோடு எனக்கு 1960 ஆண்டு ஆவணி மாதம் திருமணம் நடைபெற்றது. எனது மனைவி தங்கம்மா எனக்குத்தாய்க்குத் தாயாகவும், தாரத்திற்கு தாரமாகவும் வாழ்க்கை நடத்தி வந்தார். அன்னையின் அன்பின்றி, குறிக்கோளின்றி வளர்ந்த நான், வாழ்க்கையில் ஒவ்வொரு செயலுக்கும் மனைவியை நாடி அவரது அனுசரணையுடன் செய்ய வேண்டியிருந்தது. அனேகமாக வேலை நிமித்தம் பிற இடங்களுக்குச் செல்லவேண்டி வந்த பொழுது மனைவி மக்களுடன்தான் செல்வேன். திருகோணமலையில் நான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களும் கொழும்பில் சில வருடங்களும் குடும்பத்தோடு தங்கியிருந்தேன். அத்துடன் கண்டியில் வேலை செய்தபொழுது கண்டி நுவரேலிய போன்ற இடங்களுக்கு அவர்களை அழைத்துச்சென்றிருக்கிறேன். நான் மனைவியை விட்டு தனிமையில் வாழ்ந்த காலங்கள் குறைவு.

இந்த நிலையில் என்னையும் பிள்ளைகளையும் தவிக்கவிட்டு திடீரென இறைவனின் பாதங்களை அடைந்து விட்டார். இது எங்களுக்கு சிறிதும் எதிர்பாராத சம்பவம். பிள்ளைகளும் கதிகலங்கி நிற்கிறார்கள். அவர்களைத் தேற்ற எனக்கு மார்க்கமில்லை.

இன்பத்தையும் துன்பத்தையும் ஒரே நிலையில் ஏற்றுக்கொள் என்று பகவான் சத்யசாயி பாபா சொல்லியிருக்கிறார். நான் அதை உணர்கிறேன். ஆனால் அதைச் செயல்முறைக்குக் கொண்டுவருவது சிறிது சிரமம்.

எனது மனைவி தங்கம்மாவின் ஆத்மா பகவான் பாபாவின் பாத கமலங்களில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**சி.மகேசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை"

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், ஆலையும் தொழுவது சாலவும் நன்று. தமிழ் மூதாட்டி ஔவைப்பிராட்டியார் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் மூலம் எடுத்தியம்பிய பொன்மொழிகள். ஈர் ஐந்து மாதம் கருவோடு எமை பெற்றெடுத்து பாலூட்டி தாலாட்டி வளர்த்தெடுத்தவள் எங்கள் அன்னை. அப்படிப்பட்ட அன்னையை தெய்வமாக வணங்குகின்றோம்.

"அம்மையே அப்பா .... என்கின்ற திருவாசக அடிகளால் மணிவாசகப் பெருமானும் இறைவனை அன்னையாகவும் தந்தையாகவும் எங்கட்கு எடுத்துக்காட்டியிருக்கின்றார். உண்ணாமல் நாங்கள் கருவுற்ற நாள் முதலாக எங்களின் உயர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தன்னை அர்ப்பணித்து உழைத்தவள் எங்கள் அன்னை. நாமும் எங்கள் அன்னையில் காண்கின்றோம். வணங்குகின்றோம்.

சிறுவயதில் எங்கள் நோய்நொடி தீர தானே மருந்துண்டு எங்களைத் திடகாத்திரத்துடன் வாழ வைத்த தெய்வத்தை, எங்கள் அன்னையை எவ்விதம் மறப்போம்.

பிள்ளைகளாகிய நாங்கள் மண்ணில் நல்ல வண்ணம் ஒரு குறையுமில்லாமல் வாழ்வதற்காக ஆலய வழிபாடுகள் செய்து நோன்பிருந்ததுமல்லாமல் நோன்பிருக்கவும் வழிகாட்டி நன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிப்படுத்திய அம்மா உங்களை எவ்விதம் மறப்போம்?.

குழந்தைகளாகிய எங்களை வாழவைத்தது போல உங்கள் பேரப்பிள்ளைகளையும் மெய்வருத்தம் பாராது கண்துஞ்சாது "மெழுகுவர்த்தி எரிந்து ஏனையயவர்கட்கு ஒளி கொடுப்பது போல்" உங்கள் பேரப்பிள்ளைகளையும் பிரகாசம் அடையச்செய்தீர்களோ அம்மா! எவ்விதம் மறப்போம் உங்கள் தியாக உள்ளத்தை விபரமறியாப் பாலகர்களாகிய உங்கள் பேரப்பிள்ளைகள் மகிமாவும், லக்சனாவும் கொழும்பிற்கு போன அம்மம்மா எங்கே என்று கேட்கும் பொழுது நாங்கள் நிலை தடுமாறுகின்றோம். உங்கள் அன்பிற்கும் தியாகத்திற்கும் எங்கள் கண்ணீரையே காணிக்கையாக்குகின்றோம். வேறு ஒன்றும் செய்வதற்கு நீங்கள் சந்தர்ப்பம் தரவில்லையே அம்மா!

உலகப்பொது மறையாத்த வள்ளுவப் பெருமான் "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்கே உலகு" என்று அன்று தனது செயல்கட்கெல்லாம் தாய் தந்தையரையே முழுமுதலாக கொண்டு செயற்பட்டது போல நாங்களும் உங்களையே முழுமுதலாக முன்னெடுப்போம்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்றமகற்கு" அன்று பொய்யாமொழிப்புலவர் வள்ளுவப்பெருமான் எடுத்தியம்பினார். ஆம் அம்மா உங்கட்கு நாங்கள் பணிவிடையோ அன்றி நன்றிக்கடனோ செய்யமுடியாத பாவிகளாகிவிட்டோம். நாங்கள் எங்கள் கண்ணீரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிக்கையாக்கி உங்கள் பாதாரவிந்தங்களை வணங்குவதேயல்லாமல் வேறு ஒன்றும் செய்ய முடியாதே அம்மா!

மாதா, பிதா, குரு என்று ஆன்றோர் அன்றையே முழுமுதற் கடவுளாகப் போற்றியிருக்கின்றார்கள். நாங்களும் உங்களை முழுமுதற் கடவுளாகப் போற்றி அமைதி அடைகின்றோம்.

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**பிள்ளைகள்**

*சிறீதரன், வாசுகி, துசியந்தி, கதாதரன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் மருமக்கள், பேரப்பிள்ளைகள் புலம்பல் ..........

எங்கள் அன்புக்கினிய அம்மாவே!
எங்கு சென்றுவிட்டீர் எங்களை விட்டு
வழமைபோல் மருத்துவப் பரிசோதனை என்று
சென்றீரே மாநகராம் கொழும்பிற்கு
வந்துவிடுவேன் நான்கு மாதங்களில்
கலங்காதீர் என்று தகவல் தந்தீரே!
நான்கு மாதங்கள் காத்திருக்கத் தயாரானோம்.
ஒருமாதம் கூட ஆகவில்லை அம்மா
பேரிடி போல் செய்தி ஒன்று வந்தது
அம்மாவிற்கு கடும் வருத்தம்
மாலையில் தான் தெரியும்
அம்மா இறைவனடி சேர்ந்துவிட்டாவென்று
பிரியாவிடை பெற்று சென்றீரே அம்மா
பெட்டியில் சடலமாக வந்தீரே!
எங்களைக் கதிகலங்க விட்டுச் சென்றீரே!
நாங்கள் எப்படித் தாங்குவோம் தங்கள் பிரிவை
அம்மம்மா எங்கே? - கேட்கிறார்கள் பேரமக்கள்
பதில் சொல்லத் தெரியாது பதைக்கிறோம்
நாங்கள் உங்களுக்கு என்னகுறை விட்டோம்?
எங்களைப் பரிதவிக்க விட்டுச் சென்று விட்டீரே அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பகவான் பாபாவைப் பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்
தன்மையினாற் கண்ணில் பணிமின் கனிந்து

## தேவாரம்

எல்ல உலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ

## திருவாசகம்

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேநாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஏகநா யகனை இமயவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
யோகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலை விண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த தூய்மனத்
தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள் மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க" என்றார்

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருர் பிரம்மா குருர் விஷ்ணு குரு தேவோ
மகேஸ்வர: குருஸாஷத் பரப்பிரம்மா
தஸ்மை ஸ்ரீ குரவே நம:

## குரு

குரு தேவா சரணம் தேவா
பாஸ்ரீ ப்ரபோ சரணம் தேவா
சுந்தர ரூபா ஸ்ரீ சாயி தேவா
சரணம் சரணம் ஸத்குரு தேவா

## சக்தி

உமையவளே அருள் புரிவாய் அம்மா
ஓம்கார ரூபிணி அகிலாண்ட நாயகி
அடியார்கள் வினைதீர்க்கும் ஆதிபராசக்தி (உமை)
நான் செய்த பிழைகள் எல்லாம் பொறுப்பாய் அம்மா
ஜெகதம்பிகே சிவரஞ்சனி

## முருகன்

மரகத மயில்மீது வேல் தாங்கும் முருகா
மாலயன் காணாத ஜோதியின் பாலகா (மரகத)
மாறாத கருணை எமக்கருள் கந்தா
ஓம் முருகா ஞான வேல் முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமன்

சீதா ராமா ஸ்ரீ ரகு ராமா
தாசரதேஹே ஜெயராமா
ஆத்மா ராமா அகணீத குணதாமா
பாவன நாமா பரந்தாமா

## கிருஷ்ணர்

கோவிந்த கோபால ஹெ நந்தலாலா
ராதே கோபாலா கோபி கோபாலா
மீராகே நாதபிரவு முரளி கோபாலா
மீராககே நாத பிரபு சாயி கோபாலா
கோவர்த்த னோதார கோபாலா பாலா

## ஸாயி

சுந்தர ஸாயி சங்கரா போற்றி
நான்கு வேதத்தின் நாதனே போற்றி (சுந்தர)
உமா மஹேசா ஹர ஹர போற்றி
உண்மைப் பொருளே சிவ சிவ போற்றி
ஆதி அந்தமில்லா ஈசனே போற்றி
அம்பலத்தாடும் இறைவனே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச

நாகநாத உடையார்

- கனகராய உடையார் + செல்வம்
  - துரையப்பா + சரஸ்வதி
    - ஞானாம்பிகை (கனடா) + மாணிக்கவாசகர்
      - சரோஜா + சத்தியநாதன்
        - சுபான்
        - சுபானி
      - Dr. சாந்தா + நடராஜன்
        - உமாசாந்தி
      - ஸ்ரீகிருஷ்ணநாதன் + மாலினி
        - ஜெயகிஷான்
        - முரளி
      - பரிமளா
      - தில்லநாதன்
      - சுசீலா + மாட்மன்
        - ஜேம்ஸ்கொட்
    - இரத்தினாம்பிகை + குமாரசிங்கம்
      - கணநாதன்
      - மாலினி + ~~குகநாதன்~~ பிரகேதன்
    - பரமேஸ்வரி + சிதம்பரநாதன்
      - காங்கேயன் + இலட்சுமிப்பிள்ளை (துளசி)
      - இ[illegible]சோதி, சந்திரமோகன்
      - சடாட்சரம் + இராஜேஸ்வரி
        - [illegible]
        - [illegible]
        - [illegible]
      - யசோதா
      - யோகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி

இராமநாத உடையார்

சுவாமிநாத உடையார்

பொன்னம்பலம் + துரையப்பா

சரஸ்வதி + துரையப்பா

- ...ரி + ...தன்
  - ...பன் + ...பிள்ளை (...சி)
    - பிரதீபன்
  - ...சாரி, ...மாரன்
    - யாழினி, நட்டினி
  - ... +  ...வரி
    - பார்த்தீபன்
    - டர்சினி
    - பிரணவன்
  - ...தன்
- நாகநாதன் + சாரதாதேவி
  - பிரேமிளா + சிறிநாதன்
    - புவன்
    - பவன்
    - சுஜி
  - யோகலா + சவுந்தரநாதன்
    - கித்தூஸ்
    - சிந்தூஸ்
  - உதயகுமார் (கண்ணன்)
- **தங்கம்மா** + மகேசன்
  - சிறிதரன் (ராஜன்) + சரோஜா
    - சாள்ஸ்
    - சரத்
    - சர்மினி
  - வாசுகி + சிவகுமாரன்
    - குமரன்
    - பிரணவன்
    - பிரசாந்தன்
    - சுஜானன்
    - மகிமா
  - துசியந்தி + சிவகுமாரன்
    - லக்சனா
  - சுதாதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் அன்புக்குரிய குடும்பத்தலைவியின் மறைவையிட்டு கொழும்பிலும் சுன்னாகத்திலும் வருகை தந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் செய்தவர்களுக்கும், பல வகைகளிலும் உதவி செய்தவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பி வைத்தவர்களுக்கும், பூதவுடலை யாழ்ப்பாணம் எடுத்துவர மிகவும் உதவிபுரிந்த திரு.அப்பாப்பிள்ளை விநாயகமூர்த்தி (பா.உ.) அவர்களுக்கும், இன்று அந்தியேட்டிக்கிரியைகளில் பங்குகொண்டவர்களுக்கும், உதவி செய்தவர்களுக்கும், எங்கள் அன்பு கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கணவன்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு
நீ எதை படைத்திருந்தாய், அது விணாவதற்கு?
எதை நீ எடுத்துக்கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள் அது வோறெருவருடையதாகிறது
இதுவே உலக நியதியும், எமது படைப்பின் சாராம்சமுமாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

மகிந்தன் கொம்பியூட்டர் கிறாபிக்ஸ், 14, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org